குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 61/2017

அ.சா. 2

2025–ம் ஆண்டு நவம்பர் 26–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 2–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குணசேகர் | தொழில் | |
| தந்தை பெயர் | மகாலிங்கம் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.37 மணி,

Accused A1 Vijayavarman, A2 Jayakumar Present. A3 Thangavel Died and Charge Abated. Advocate Mr. M.Raja present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் நல்லகவுண்டம்பட்டியில் குடியிருந்து கட்டிட மேஸ்திரியாக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும். சுமார் 8–9 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் 12.00 மணியளவில் எங்கள் ஊரில் என் வீட்டில் இருந்து தெரு முடியும் இடத்தில் சத்தம் கேட்டது. நான் அங்கு சென்று பார்த்தபோது விஜய வர்மன், ஜெயக்குமார், தங்கவேல் மற்றும் பன்னீர்செல்வம் ஆகியோர் சண்டைபோட்டுக்கொண்டதாக ஊர்காரர்கள் சொன்னார்கள். யார் யாரை அடித்தார்கள் என்று நான் பார்க்கவில்லை.

2. நான் அ.சா.1 பன்னீர்செல்வம் வீட்டை பார்த்தபோது அவரது வீட்டின் முன்கதவில் பொறுத்தப்பட்டிருந்து கண்ணாடி உடைந்து அதன் துண்டுகள் சிதறி கிடந்தன. அதன் பின்பு போலிசார் வந்து விசாரித்தனர். போலிசார் என்னையும் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.26 17:59:51 +0530

3. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 03.03.2016 ம் தேதி மதியம் 01.00 மணியளவில் எதிரிகள் மூவரும் அ.சா.1 ன் வீட்டிற்கு சென்று அங்கிருந்த அ.,சா.1–ற்கு சொந்தமான TN 54 F 8239 என்ற பதிவு எண் கொண்ட Scooty Plus வாகனத்தை கீழே தள்ளி சேதப்படுத்தினார்கள் என்றும் 1ம் எதிரி அ.சா.1 ன் வீட்டின் கண்ணாடி ஜன்னலை உடைத்தார் என்றும் 3ம் எதிரி அ.சா. 1 யை பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டினார்கள் என்றும் 2ம் எதிரி பட்டியல் சாட்சி மீனா என்பவரை பார்த்து கெட்டவார்த்தையால் திட்டினார் என்றும் 2ம் எதிரி அ.சா.1 ன் கழுத்தில் கையால் கீறினார் என்றும் 3ம் எதிரி அ.சா.1 ன் நெஞ்சு, முதுகு ஆகிய இடங்களில் கையால் அடித்தார்கள் என்றும். எதிரிகள் மூவரும் சேர்ந்து பட்டியல் சாட்சி மீனா என்பரை கீழே தள்ளி கையால் அடித்து அ.சா.1 யை பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்துவிட்டு விசாரணையின்ள போது கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.47 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.26 17:59:54 +0530